

மதுரை தெற்கு மாவட்டம் உசிலம்பட்டி நகர் கழகம் சார்பில் கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., ஆகியோர் நகர் கழகச் செயலாளர் எஸ்.ஓ.ஆர். தங்கப்பாண்டியன் ஏற்பாட்டில் தமிழ்நாட்டில் முதன்முறையாக 700 மயான பணியாளர்கள் குடும்பங்களுக்கு கேஸ் அடுப்பு மற்றும் புத்தாடைகள் வழங்கினார். உடன் தொகுதி பொறுப்பாளர் வக்கீல் செல்லத்துரை மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், பயனாளிகள் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.

### நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் யாரை நோக்கி இருக்கிறதோ அதையெல்லாம் தவிர்த்து விடுகிறீர்கள்!

# ஒரு கணம் நீங்களே உங்களை சுயபரிசோதனை செய்து கொள்ளுங்கள்!

## செய்தியாளர்கள் கேள்விக்கு முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி பதில்!

கோவை, அக். 7 –



நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் யாரை நோக்கி இருக்கோ அதெல்லாம் தவிர்த்து விடுகிறீர்கள். ஒரு கணம் நீங்களே உங்களை சுயபரிசோதனை செய்து கொள்ளுங்கள் என்று செய்தியாளர்கள் கேள்விக்கு முன்னாள் அமைச்சர், மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி பதில் கூறினார்.

செய்தியாளர்களிடம் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. கூறியதாவது : கழகத் தலைவர், தமிழ்நாட்டின் ஒப்பற்ற முதலமைச்சர், தளபதி அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி பகுதி கழக செயலாளராக, அதற்கு முன்பாக இளைஞர் அணி என தொடர்ந்து பல்வேறு பொறுப்புகளை வகித்து வந்த துரை.செந்தமிழ்ச் செல்வன் அவர்கள் மாநகர் மாவட்டக் கழகத்தினுடைய பொறுப்பாளராக கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இன்று தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து அவருடைய பொறுப்பை முறைப்படி இன்று ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அவருக்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும் எங்கள் அனைவரின் சார்பாகவும் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தை பொறுத்தவரையிலும் பத்து சட்டமன்ற தொகுதிகளிலும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற வேட்பாளரை வரக்கூடிய 2026 சட்டமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பதற்காக ஏற்கனவே பூத் கமிட்டி அமைக்கக்கூடிய பணிகள் தொடங்கி பல்வேறு தேர்தல் களப்பணிகளை முன்னெடுத்திருக்கின்றோம். அதற்கான பணிகள் என்பது மிகச் சிறப்பாக சென்று கொண்டிருக் கின்றன. அதற்கு வலுசேர்க்கக்கூடிய வகையில் மாவட்டக் கழகத்தினுடைய புதிய பொறுப்பாளராக அன்பு சகோதரர் இன்று பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கின்றார். ஏற்கனவே மிகச் சிறப்பாக செயல்பட்டு வந்த போற்றுதலுக்குரிய அண்ணன் கார்த்திக் அவர்களுடைய பணியும் சேர்த்து தொடர்ந்து இப்பொழுது மிகச் சிறப்பாக செய்வார் என்ற நம்பிக்கை கழக நிர்வாகிடத்தில் இருக்கின்றன, நிச்சயம் அதை நிறைவேற்றுவார்,

**கேள்வி** : புஸ்ஸி ஆனந்த் அவரது பொறுப்பை தட்டிக் கழிப்பது போன்று பேசியிருக்கிறாரே?

**பதில்** : ஏற்கனவே வந்து அது சம்பந்தமான முழு விளக்கங்கள் நான் கரூரிலேயே பிரஸ் மீட்ல முழுசா கொடுத்திருக்கிறேன். ஏறத் தாழ ஒரு மணி நேரம் கொடுத்திருக்கிறேன். அது சம்பந்தமா இப்பொழுது எஸ்ஐடி நிறுவப்பட்டிருக்கின்றன, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இந்த விசாரணை முடிந்த பிறகு அது சம்பந்தமா பேசினா சரியா இருக்கும், தொடர்ந்து அது சம்பந்தமான கேள்விகள் தவிர்த்து விடலாம்.

**கேள்வி** : புது புது வீடியோக்கள் வெளியாகிகொண்டு இருக்கிறதே?

**பதில்** : அது போறது போகட்டும், அதெல்லாம் எந்தெந்த வீடியோக்கள் வெளியாகும் அதெல்லாம் விசாரணை ஆணையத்தில் கொடுப்பார்கள், விசாரணைஆணையம் விசாரிப்பார்கள். அது விசாரணை முடிந்த பிறகு நாம் அது சம்பந்தமான கருத்துக்கள் சொன்னா நல்லா இருக்கும், ஏற்கனவே என்னுடைய தரப்பில் இருக்கக்கூடியது நாங்கள் அங்கு என்ன இருந்து பார்த்தது அதெல்லாம் ஏற்கனவே முழுவதுமா சொல்லப்பட்டிருக்கிறது. திரும்ப அதுக்குள்ள போக வேண்டியதில்லை,

**கேள்வி** : தமிழக அரசு வந்து இந்த சம்பவத்தை வைத்து அரசியல் பண்ணுகிறதா சொல்றாங்க,

**பதில்** : அதுதான் நான் சொன்னேன். உங்களுக்கு எல்லா கேள்வியும் ஒன்னுதான், அதைத்தான் நானும் சொல்றேன் நான், ஏற்கனவே அரசின் சார்பில் முழு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டத்தில் நடந்த நிகழ்வுகள் குறித்து கரூரிலிருந்து முழு விளக்கங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. விசாரணை சென்று கொண்டிருக்கின்றன. விசாரணை முடிந்த பிறகு இறுதி அறிக்கையில் என்ன வருகிறது என்பதை பார்த்து அப்பொழுது நாம் பேசுவோம் அதுதான் சரியாகவும் இருக்கும்.

பொதுவான ஒரு கருத்து மட்டும், நான் நேற்று கூட ஒரு நண்பர்கிட்ட கேட்டேன், உங்களை போல ஒரு பத்திரிக்கையாளர் என்கிட்ட கேட்கும் போது கேட்டேன் அரசின் மீது கேட்கக்கூடிய கேள்விகள் அது வந்து இன்னொரு பக்கம் அந்த கேள்வியே திரும்பி போக மாட்டேங்குதே அப்படிங்கிற என்னுடைய கருத்தை நான் சொன்னேன், உங்களுக்கும் அதை தான் நான் சொல்றேன். அதாவது யாருகிட்ட கேட்க வேண்டிய கேள்வியை நீங்க யாருகிட்ட கேட்கிறேங்கிற சுயபரிசோதனை பண்ணுங்க, யாருகிட்ட இந்த கேள்விகள் கேட்கணும், ஏன் 7 மணி நேரம் லேட்டா வந்தீங்கன்னு கேட்டிருக்கணும், ஏன் 500 மீட்டருக்கு முன்னாடி வண்டிக்குள்ள போய் ஸ்கிரீன் போட்டு லைட் ஆஃப் பண்ணீங்கன்னு கேட்டிருக்கணும், ஏன் 12 மணிக்கு அறிவிச்சீங்கன்னு கேட்டிருக்கணும் 12 மணிக்கு அறிவிச்சிட்டு 7:00 மணிக்கு ஏன் வந்தீங்கன்னு கேட்டிருக்கணும் டிசம்பர்ல நடக்கிறது ஏன் அட்வான்ஸ் பண்ணி வந்துச்சுன்னு பல கேள்விகள் இருக்கிறது. இந்த கேள்விகள் எல்லாம் சமூக வலை தளங்கள்ல வர்றது இல்ல, பத்திரிகைகளில் வர்றது இல்ல, தொலைக்காட்சிகளில் வர்றது இல்ல, விவாதங்களில் நீங்க எடுத்துக்கிறது இல்ல, யாரை நோக்கி நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகள் இருக்கோ அதெல்லாம் தவிர்த்து விடுகிறீர்கள். ஒரு கணம் நீங்களா உங்களை சுயபரிசோதனை பண்ணி பாருங்கள்,

உங்களுடைய செய்திகள் வரணும், உங்களுடைய தொலைக்காட்சிகளில் முன்னாடி வரணும், செய்திகள் விரைவா போகணும் அப்படிங்கிறதுக்காக இருக்கக்கூடிய எதார்த்த சூழலை எடுத்து சொல்ல வேண்டிய கடமை நம்மகிட்ட இருக்கு, இருக்கா இல்லையா? பொறுப்பு நம்மகிட்ட இருக்கு, அந்த பொறுப்பு என்ன நடந்துச்சு, எப்படி நடந்துச்சு, இதுல யாரெல்லாம் இருக்காங்க, ஒரு கேள்வி என் கிட்ட கேட்டா எதிர் முகாமில் இன்னொரு கேள்வி கேட்கணும்ல, அந்த கேள்விக்கு அப்புறம் என்கிட்ட பதில் கேட்டா பரவாயில்லை, ஒரே தரப்புல உங்களுடைய கேள்விகள் மட்டும் இருக்கு, இன்னொரு தரப்புல கேள்வியே இல்லாம இருக்கு அதனால தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் கரூர் சம்பவம் சம்பந்தமா இப்ப எந்த கேள்வியும் வேண்டாம் விசாரணை முடியட்டும் அறிக்கை வந்த பிறகு நம்ம திரும்ப சந்திப்போம் என்று அவர் கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது மாவட்டச் செயலாளர்கள் தளபதி முருகேசன் (கோவை தெற்கு), தொண்டாமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்ட அவைத்தலைவர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், கழக சொத்துப் பாதுகாப்புக்குழு துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, கழக தீர்மான்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, பஞ்சாலை தொழிற்சங்க பொதுச் செயலாளர் பார்த்தசாரதி, கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மு.வாசிம்ராஜா, கழக வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், கழக மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் அ.திராவிடமணி, கூட்டுறவு தொமுச மாநில தலைவர் எஸ்.உமாகாந்தன், கழகத் தீர்மான குழு உறுப்பினர் ஆ.நாச்சிமுத்து, கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் விஷ்ணுபிரபு, கழக கலை, இலக்கிய, பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் நா.தமிழ்ச்செல்வன், கோவை அரசு போக்குவரத்து கழக பொதுச் செயலாளர் கே.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி.கண்ணப்பன், வி.பாலசுப்ரமணியன், ஏர்போர்ட் ராஜேந்திரன், பி.ஆனந்தகுமார், கல்பனா ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜோ.நோயல் செல்வம், வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், வெ.சசிகுமார், எஸ்.கே.ஆனந்தகுமார், ச.குப்புசாமி, தங்கம் (எ) சந்திரசேகரன், எஸ்.பி.சரஸ்வதி புஷ்பராஜ், ச.கார்த்திகேயன், கல்பனா ஆனந்தகுமார், பகுதி கழக பொறுப்பாளர்கள் வ.ம.சண்முகசுந்தரம், ஏ.எம்.கிருஷ்ணராஜ், கே.எம்.ரவி, பரணி கே.பாக்யராஜ், அஞ்சுகம் பழனியப்பன், சி. ராமச்சந்திரன், குட்டி (எ) ஜெயசந்திரன், பாபு (எ) பாலசுப்பிரமணியன், எஸ்.எம்.சாமி, மு.சிவா, சேக் அப்துல்லா, துரை.செந்தமிழ்செல்வன், இரா.சேரலாதன்,மா.நாகராஜ், ஏ. எஸ்.நடராஜ், ப.மோகன்ராஜ், கஸ்தூரி அருண், ப.அன்பழகன் ஆர். எம்.சேதுராமன், ப.பசுபதி, மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், டெம்போ சிவா, இலா.தேவசீலன், ஆ.கண்ணன், என்.ஜே.முருகேசன், மண்டலத் தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், கே.ஏ.தெய்வானை தமிழ்மறை, நிலைக்குழுத் தலைவர்கள் பி.மாரிசெல்வன், பி. பி.முபசீரா, சாந்திமுருகன், தீபா இளங்கோ, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், துணை அமைப்பாளர்கள் கே.பி.திருமலைராஜா, துரை பிரவீன்குமார், கோவை அருண், தே.லாராபிரேம்தேவ், க.மணிகண்டன், சி.எம்.எஸ். மசூது, மாவட்ட அணி அமைப்பாளர்கள் அன்புசெழியன், ஆர்.கே. சுரேஷ்குமார், கே.ஆர்.ராஜா, வி. மணி, எஸ்.ராஜ்குமார், வி.சிவபிரகாஷ், ந.அக்ரிபாலு, மு.பிரதிப்குமார். இலா.தேவசீலன், எஸ்.கண்ணன், பி.சிவராஜ், எஸ்.பூரணசந்திரன், ஏ. எஸ்.ஜெயகுமார், டி.கண்ணன், நா. பாபு, அ.அபுதாஹிர், இரா.அர்ச்சுனன், எம்.எம்.சஞ்சய்குமார், வி.அன்னம்மாள், சி.ஆர்.கனிமொழி, ஸ்ரீ சத்யா கோவை தங்கம், 53 வது வார்டு செயலாளர் மா.சிவகுமரன், நிர்வாகிகள் பா.அரவிந்த்குமார் ராமதாஸ், மகேஷ் பாபு,மகேந்திர மணி, நாகராஜ், சின்னசாமி, ரெங்கநாதன், பாக்த்வாத்சலம், ஜான் உள்பட அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

### கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. மூத்த முன்னோடி

# தெப்பக்குளம் ஹாஜி ஜே.சிராஜுதீன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

*சென்னை, அக். 7 -*

*கோவை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் சுமார் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக தன்னை இணைத்துக் கொண்டு,பணியாற்றியவர், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. தெப்பக்குளம் பகுதி (5 வது பகுதி) முதல் செயலாளர், பகுதிக் கழகச் செயலாளர், கழக பொதுக்குழு உறுப்பினர், தி.மு.கழக மேடைகளில் மிகச் சிறப்பாகப் பேசக்கூடிய ஆற்றல் படைத்த தலைமைக் கழகப் பேச்சாளர், ஹாஜி ஜே.சிராஜுதீன் அவர்கள் (வயது 78) வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் இரவு கேரளா மாநிலம் கொழிஞ்சாபாறையில் உள்ள அவரது மகள் இல்லத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து பெரிதும் வருந்திய* ***கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது குடும்பத்தாருக்கும் கோவை மாவட்டக் கழகத்தினருக்கும் தமது ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துள்ளார்.***

---







மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மேலூர் சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகள், வாக்குச் சாவடி பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டம் மேலூரில் நடைபெற்றதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர், மாநிலங்களவை குழு தலைவர், மேலூர் சட்டமன்ற தொகுதி மேற்பார்வையாளர் திருச்சி என் சிவா எம் பி, வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் தேர்தல் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினர். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், கருதியாகராஜன், தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், முகமது யாசின், வக்கீல் கலாநிதி, மேலூர் அல்போன்ஸ், குமரன், ராஜராஜன், குமரேசன், பழனி, கிருஷ்ணமூர்த்தி மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்.

### கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. மூத்த முன்னோடி

# தெப்பக்குளம் ஹாஜி ஜே.சிராஜுதீன் மறைவு!

## நேற்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றன!

*கோவை, அக். 7 -*

*கோவை மாநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தில் சுமார் 50 ஆண்டு காலத்திற்கும் மேலாக தன்னை இணைத்துக் கொண்டு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. தெப்பக்குளம் பகுதி (5 வது பகுதி) முதல் செயலாளர், பகுதிக் கழகச் செயலாளர், கழக பொதுக்குழு உறுப்பினர்,*



*தி.மு.கழக மேடைகளில் மிகச் சிறப்பாகப் பேசக்கூடிய ஆற்றல் படைத்த தலைமைக் கழகப் பேச்சாளர், நீண்டகாலம் கோட்டைமேடு வட்ட கழக செயலாளர் என பல்வேறு பொறுப்புகளில் திறம்படப் பணியாற்றிய கழகச் செயல்வீரர், கழகத் தோழர்களின் நன்மதிப்பைப் பெற்ற கழக செயல் மறவர் ஹாஜி ஜே.சிராஜுதீன் அவர்கள் (வயது 78) வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் இரவு கேரளா மாநிலம் கொழிஞ்சாபாறையில் உள்ள அவரது மகள் இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*அவருடைய மனைவியும், மகனும் முன்னதாகவே இறந்து விட்டனர், தற்பொழுது அவருக்கு இரண்டு மகள்கள் மட்டுமே உள்ளனர். அவரது உடல் நேற்று (06.10.2025) மதியம் 1.00 மணிக்கு கோவை கோட்டைமேடு, ஆத்துப்பாலம் பொது ஸ்தாபனத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.*



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் மாசிநாயக்கன்பட்டி ஊராட்சியை சேர்ந்த ரியாஸ், ஆஷிஷ் சேக் ,முகமது ஆசிப், ஆகியோர் தலைமையில் 100 பேர் அதிமுகவிலிருந்து விலகி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ஏ. விஜயகுமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நடராஜ் ,ஒன்றிய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வேலு , கிளை கழக செயலாளர் சுந்தர், ராமச்சந்திரன், மாதேஸ்வரன் , உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நீலநாராயணன்

**அக்டோபர் 7 (1996)**



**எல்லோராலும் 'நீலம்' என்று அன்புடன் அழைக்கப்பட்டவர்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர்.**

**கழக அமைப்புச் செயலாளராகவும் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரு முறையும் பணியாற்றியவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவர்.**

**தலைமைக் கழகச் சார்பில் 'பெரியார் விருது' பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல போராட்டங்களில் சிறை சென்றதோடு மிசா கைதியாக ஓராண்டு சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா. துரைராஜன்

**அக்டோபர் 7 (2017)**



**நாகப்பட்டினம் மாவட்டத்தில் கழகம் வளர்த்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1966ல் வட்டத் தலைவராகவும் – 1972 முதல் 1995 ஆம் ஆண்டு வரையிலான 23 ஆண்டுகள் தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வீடுகட்டும் கூட்டுறவு சங்கத் தலைவராகவும், வார்டு கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**